# சீதனத்தின் பொருளாதாரம் : கோண்டாவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவுப் பெண்களிலிருந்தான அநுபவப் பகிர்வு

**மந்துஷா, V., நேருஜா,ந.**
பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
manthusha172@gmail.com

*மக்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்டுள்ள ஒரு விடயமாக திருமணபந்தம் காணப்படுகின்றது. பொருளியல் ஆய்வுகளில் சீதனம் பற்றிய ஆய்வு மிகவும் பிரதானமாகக் காணப்படுவதோடு சமீபத்திய அதிகரிப்புடன் வரதட்சணைப் பணவீக்கம் என்று அழைக்கப் படுகின்றது. இவ் ஆய்வின் பிரதான நோக்கம் தமிழ்ப்பெண்களுக்கும் சீதனப்பொருளா தாரத்துக்கும் இடையிலான தொடர்பினை அடையாளப்படுத்துவதாகும். நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் கிழக்கு கிராமசேவகர் பிரிவை ஆய்வு பிரதேசமாக இது கொண்டுள்ளது. கோண்டாவில் கிழக்கு எனும் கிராமமானது 759 குடும்பங்களைக் கொண்டமைந்தது. இதிலிருந்து நோக்க அடிப்படையிலான வீதாசார மாதிரியெடுப்பு முறை மூலம் 80 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் ஆய்வாளனால் ஆய்வுக்களத்துக்கு நேரடியாகச் சென்று கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் யாழ் மாவட்டச் செயலக மற்றும் நல்லூர் பிரதேச செயலக புள்ளிவிபரக் கையேடுகள், கிராமசேவகர் பிரிவுகளின் கையேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவை விபரணப் புள்ளிவிபரவியல், நேரடி அவதானம் மற்றும் கலந்துரையாடல்கள், இணைவுக் குணகப் பகுப்பாய்வு,* Independent Samples Test, Chi - Square Test *போன்றனவும் மென்பொதியாக* SPSS *என்பன ஆய்வுக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப பெண்ணினுடைய தொழில் நிலை தொடர்பில் திருமணமான பெண்களில் அரைவாசிக்கு மேற்பட்ட* 61.3% *ஆனவர்கள் வீட்டுப் பெண்களாகவும்* 32.8% *ஆனவர்கள் சிறந்த கல்வித்தரத்தினைக் கொண்டிருப்பதோடு அரசஊழியர்களாகவும் காணப்படுகின்றனர். சீதனமானது பணம் மற்றும் சொத்து வடிவில் (வீடு, நிலம், கட்டிடம்) வழங்கப்பட்டுள்ளது. இணைவுக்குணகப் பகுப்பாய்வில் சீதனத்திற்கும் சேமிப்பிற்கும் இடையிலான இணைவுக்குணகம் 0.280 என்ற பெறுமதியினைக் கொண்டிருக்கின்றது. இவ்விரு மாறிகளுக்குமிடையில் பலவீனமான நேர்க்கணியத் தொடர்பானது வெளிக்காட்டப்பட்டுள்ளது. சீதனத்திற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குமிடையான தொடர்பில் இணைவுக்குணகம் 0.066 என்ற பெறுமதியில் பலவீனமான பொருளுண்மை மட்டத்தினைக் கொண்டிருக்கின்றது. சீதனம் மக்களினுடைய வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்கின்றது என அதிகமானோர் குறிப்பிட்டுள்ளனர். சீதனத்தைத் தீர்மானிக்கும் சமூக, பொருளாதார, கலாசார, உளவியல் காரணிகளுக்கு இடையிலான தொடர்பினை நோக்கும் போது பெற்றோர் எதிர்கொண்ட உளவியல் தாக்கங்களாக திருமண வயதை எட்டியும் தமது பிள்ளைகள் வாழ்க்கைப்பட முடியா திருக்கும் நிலையை எண்ணித் தவித்தல், உறவினர்கள் கடன் கொடுப்பதில் பின் நின்றமை,*